செய்தி வெளியீடு எண்–445 நாள்–11.08.2008

# செய்தி வெளியீடு

## சீனாவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில்
## துப்பாக்கி சுடும் பிரிவில்
## தங்கப் பதக்கம் வென்று வரலாறு படைத்துள்ள
## இந்திய வீரர் அபினவ் பிந்த்ரா அவர்களுக்கு
## தமிழக அரசின் சார்பில் பாராட்டு !
## 5 இலட்ச ரூபாய் பரிசு !

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு !

**சீனத் தலைநகர் பெய்ஜிங் நகரில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான துப்பாக்கி சுடும் பிரிவில் இந்திய வீரர் திரு. அபினவ் பிந்த்ரா தங்கப் பதக்கம் வென்று ஒரு மிகப் பெரிய வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.**

**இதுவரை நடைபெற்றுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் தனி நபர் பிரிவில் இந்தியா தங்கம் பதக்கம் பெற்றதில்லை. அதுமட்டுமல்லாமல் கடந்த 28 ஆண்டுகளில் நடைபெற்றுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா எந்த ஒரு பிரிவிலும் தங்கப் பதக்கம் பெற்றதில்லை. இக்குறைகளை நீக்கி, தனிநபர் பிரிவில் முதன்முறையாக திரு.அபினவ் பிந்த்ரா தங்கப் பதக்கம் பெற்று ஒரு புதிய வரலாற்றைப் படைத்துள்ளார்.**

**இவர் உத்ரகாண்ட் மாநிலம் டேராடூனில் பிறந்தவர். தற்போது சண்டிகர் நகரில் வசித்து வருகிறார். துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுள்ளதன்வாயிலாக இந்தியாவுக்குப் பெருமைத் தேடி தந்து வரலாறு படைத்துள்ள திரு. அபினவ் பிந்த்ரா அவர்களுக்குப் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளதுடன், அவருக்குத் தமிழக அரசின் சார்பில் 5 இலட்ச ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.**

* * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.